# மீச் செலவு
## AGGRESSION

க. சிவானந்தமூர்த்தி

1.0 மனித வாழ்வியல் செயல்பாடுகளில் விளைவுகள் நேர்க்கணியமாக அமையப்பெறினும்; அவற்றின் தாக்கங்கள், பட்டுத் தெறிப்புக்கள் வாழ்வியலை சுற்றியவாறாயே இருக்கும். ஏனெனில் மனிதன் ஒரு சமூகப்பிராணி ஆவான். மனிதர்களுக்கிடையிலான இடைவினைகள், ஒருவரை சில சந்தர்ப்பங்களில் மகிழ வைக்கவும் அல்லது நோகவைக்கவும் செய்துவிடுகின்றன. மனிதநடவடிக்கைகளில் சில மகிழ்வுக்குரியதாகவும் சில வேதனைக்குரியதாகவும் அமைந்திடக் காரணம் என்ன என்பது குறித்து உளவியலாளர்கள், குறிப்பாக சமூக உளவியலாளர்கள் காலா காலமாக அக்கறைப்பாட்டுடன் ஆராய்ந்தார்கள். நடவடிக்கைகளின்போது எவை எவ்வாறாய் செல்வாக்குச் செலுத்துகின்றது என அவ்வாராய்வுகள் அமைந்தன. இவ்வகையில் மனித இடைவினைகளில் தோற்றம் பெறுகிற முக்கியமானதொன்றாகவும், விளைவுகள் பலதினை ஏற்படுத்துகின்றதொன்றாகவும் மீச்செலவு பெறப்பட்டது. எனவே மீச்செலவு குறித்த ஆராட்சிகள் உளவியலாளர்களுக்கு முக்கியமாய்ப்பட்டது.

மீச்செலவு நீண்டவரலாற்றினை கொண்டிருப்பதுடன் பல்வேறு மனித கலாச்சாரங்களிலும் என்றுமாய் காணப்படுகிறதொன்றாகும். ஹொப்ஸ் (Hoppes) (1588-1673) மனிதன் போரிடும் குணம் கொண்டவன் எனச் சுட்டிக்காட்டினார். சமூக நியமங்களைக் கவனத்தில் எடுக்காது தன் மனம் போன போக்கில் தன் விருப்புக்களுக்காக, தன்நிறைவுகளுக்காக போரிடுபவன் என மேலும் குறிப்பிட்டார்.[1] இவ்வகையில் மனிதன் மீச்செலவாளனாகி செயல்படுவதற்குரிய ஊக்கிகளை தன்வயமாகக் கொண்டவன் என்பது பெறப்படலாயிற்று.

1.1 தொலைத்தொடர்பு ஊடகங்கள் என்றுமில்லாதவாறாய் இன்றைய காலகட்டத்தில் வன்செயல்குறித்தும், மீச் செலவு குறித்ததுமான செய்திகளை வெளியிடுதலை காணக்கூடியதாய் உள்ளன. மீச்செலவுக்கும் வன்செயலுக்கும் இடனான பிரஜைகள் உலகளாவிய ரீதியில் பரந்து காணப்படினும்கூட அமெரிக்கர்கள் மீச்செலவு நடவடிக்கைகளில் முன்னணி வகிக்கிறார்கள் எனலாம். வன்செயல் அமெரிக்காவினைப் போன்றதென்றும், அமெரிக்கர்கள் கிளர்ச்சியூட்டும் இனிப்புப் பண்டம் போன்றவர்கள் என்றும் ராப்பிறவுண் (Rapbrown) கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.[2] மேலும் அமெரிக்கர்கள் வன்செயல் மிக்கவர்கள் என்றவாறாக வன்செயலுக்கான காரணங்களும் அதற்கான தடுப்புக்களும் பற்றிய தேசிய ஆணைக்குழு வெளியிட்ட கருத்து, மேற்குறித்த கருத்தாக் கத்தை வழிமொழிவதாய் அமைகிறது.[3]

600 ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்துவின் தூதர் எனக் கருதப்பட்ட எசேக்கியேல் (Ezekiel) மீச் செலவின் கோரநிலை குறித்துக் குறிப்பிடுகையில்; தேசம் முற்றாக இரத்தச் சுவடுகளோடு கூடிய குற்றங்கள் நிறைந்ததாகவும் நகரங்கள் கூடுதலான வன்செயல் நிறைந்ததாகவும் காணப்படும் என்றார்.[4] எனவே மீச்செலவு நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதும், பொதுவாக சமூகவிரோத நடத்தைகளை ஊக்குவிப்பதொன்றாகவும் காணப்படுகின்றது.

2.0 மீச்செலவை வரைவிலக்கணப்படுத்துதல் எளிதல்ல, அகன்றளவிலான செயற்பாட்டைக் குறிக்கும் ஓர் கருத்தாக்கம் இது. மனிதன் மீதாய் மனிதன் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புக்களை மட்டும் மீச்செலவு குறிக்கவில்லை. மேலாய் பிறிதோர் உயிரிமீதாய்

மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு செயலும், நாடொன்றை பிறிதோர் நாடு ஆக்கிரமிக்கும் செயலும் மீச்செலவு நடவடிக்கை என்றவாறாகவே கருதப்படுகின்றது. விலங்கும் விலங்கும் போரிடுதலினைக் கூட மீச்செலவு எனலாம். ஆக, பரந்துபட்ட புலத்தில் பாவனைக்குட்படுத்தப்படுமோர் பதமே மீச்செலவு ஆகும். உளவியலாளர்களது கவனத்தை மட்டுமல்லாது மானிடவியலாளர்கள், சமூகவியலாளர்கள், மெய்யியலாளர்கள், வேறுபட்ட துறைசார்ந்தவர்கள் போன்றவர்களது கவனத்தை ஈர்த்துக்கொண்டதொன்றாக மீச் செலவு அமைந்து காணப்படுகின்றது.

2.1 எவ்வகைப்பட்ட வடிவத்தை கொண்டதோர் நடத்தையாயினும் அது பிறிதோர் உயிரியை நோக்கி துன்பத்தை, நோவை, காயத்தை ஏற்படுத்துகின்ற செயல்பாட்டையுடையதெனின் அதனை மீச் செலவு எனலாம். மேலும் இவ் மீச்செலவு நடவடிக்கையை எதிர்கொள்ளும் உயிரி அத்தகைய நடத்தையை ஏற்க விருப்பமற்றதாய்க் காணப்படும் என்கிறார் பாரொன் (Baron)[5] மீச்செலவு பன்முகப்படுத்தப்பட்டதோர் ஆளுகைப் புலத்தினைக் கொண்டதோர் எண்ணக்கரு என்கிறார். ரோகர் யோன்சன் (Roger Johnson)[6] பிறிதொரு உயிரிக்கு மேலாய் அவ் உயிரி அத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளத்தக்க உந்துதலைப் பெற்றிருந்தும் கூட அவ் உயிரி மீதாய் காயத்தை நோவை விளைவிக்கிறதோர் நடத்தையே மீச்செலவு ஆகும்.[7]

2.1.0 குறிப்பிட்ட வரைவிலக்கணங்களில் இருந்து மீச்செலவு என்பதோர் நடத்தை வடிவம் எனவும் அது பன்முகப்படுத்தப்பட்ட காரணிகளினால் செல்வாக்குக்குட்படுத்தப்படும் ஒன்று எனப்தும் பெறப்படுகின்றது. மீச்செலவு வெவ்வேறான அலகுகளுடன் தொடர்புபட்டதென உளவியல் ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன. குறிப்பாக பரம்பரை, பால், கூர்ப்பு, உடற்சூற்றியல், கற்றல், வளர்ச்சி போன்றவைகளுடன் மீச்செலவின் தொடர்புகள் காணப்படும். மேலும் கொனாட் லோறன்ஸ் (Konrad Lorenz) றோபேட் அன்ரி (Robert Andrey) டெஸ்மொன்ட் மொறிஸ் (Desmond Morris) போன்ற உளவியலாளர்கள் மனிதர் ஓர் விலங்கு என்கின்ற கருத்தாக்கத்தினை முன்மொழிந்ததுடன் பிற விலங்குகளைக் காட்டிலும் மனிதர்கள் கொடூரமானவர்கள் பண்டாடற்ற மீச்செலவாளர்கள் எனக் குறிப்பிட்டு மேலும் கொலை, கொள்ளை, யுத்தம் அழிக்கின்ற மன்பாங்குகள் போன்றன மனித இனவித்துக்களிலேயே வேரூன்றியதெனவும் குறிப்பிட்டார்கள்.[8] இக்கருத்தாக்கங் களிலிருந்து மீச்செலவு ஓர் உள்ளார்ந்த ஊக்கியாய் உள்ளதெனலாம். மனிதனது நரம்பியல் தொகுதி முன்னேற்பாடாய் மீச்செலவு குறித்த நடத்தைகளை உருவாக்கும் ஆதிக்கப்பாங்கை கொண்டுள்ளது எனவும் மேற்கூறிய உளவியலாளர்கள் கண்டுகொண்டார்கள். மீச் செலவு அழிவுச்செயல்களை மட்டும் கொண்ட நடவடிக்கைப் பங்கு என்று கருதுவதைக் காட்டிலும் மீச்செலவு வாழ்வியலைப் பாதுகாத்துக் கொள்வதில் பெரும்பங்கு கொண்டுள்ளது என பிராய்ட் குறிப்பிடுகின்றார். மேலும கொனாட்ஸ் போன்ற உளவியலாளர்கள் உயிரினங்கள் தப்பித்துவாழும் முறைமையை முன்னெடுப்பதற்காக அல்லது தம் நிலைமையை முன்னேற்றுவதற்காக தம்முடனாய் பொத்திக்கொண்டதோர் பொறிமுறையே மீச்செலவு எனக் குறிப்பிட்டார்.

மீச்செலவில் சமூகக்காரணிகளின் பங்கு குறித்து லியனோட் பேகவுட்ஸ் (Leonared Berkowitz) ஆராட்சியினை மேற்கொண்டார். சூழல் தாக்கம் மீச்செலவுருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டிருக்கின்றதென்றார். சாமானியன் ஒருவன் துவக்கு ஒன்றினை கண்டால் அவனது நடத்தையில் மீச்செலவு செல்வாக்கு செலுத்துவதனை அவதானிக்கக்கூடியதாய் இருந்தது என்றார். இவர் இதனை ஆயுதச் செல்வாக்கு (Weapons Effect) என்கிறார். இத்தகைய

கருத்தாக்கம் தேசிய துவக்கு சங்கத்தின் "துவக்கு மனிதனை கொல்வதில்லை மனிதனே மனிதனைக் கொல்கின்றான்" என்கின்ற கருத்தாக்கத்துடன் முரண்பட்டாலும் கூட பேக்வுட்ஸ் தனது கருத்தாக்கத்தினை மீளவும் வலியுறுத்துகின்றார்.[9]

2.1.1 மீச்செலவு நடத்தையை தூண்டுவதில் மனோரதிய பொருட்கள் பெரிதும் பங்காற்று கின்றன என்கின்ற கருத்தாக்கம் சமகாலத்தில் முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது. சமூக விஞ்ஞானிகள் சிலர்; மஞ்சள் பத்திரிகைகளும் நீலப்படங்களும் பாலியல் மீச்செலவு வன்செயலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றதென்றனர்.

Presidential Commission Report மேற்குறித்த கருத்தாக்கத்தினை மறுதலித்தாலும்கூட; சமகால ஆய்வுகள் குறித்த கருத்தாக்கத்தினை மீள வலியுறுத்துகின்றன. ஆய்வுகளைப் பொறுத்தவரை மனிதப்பாலியலும் மீச்செலவும் இணைத்தன்மை வாய்ந்த நடத்தைகளென வெளிப்படுத்துகின்றன. இவையிரண்டுக்குமிடையே மிகத் துல்லியமான இணைத்தன்மை காணப்படுகின்றதென சமூக உளவியலாளர்கள் கருதுகின்றனர். பாலியல் உந்தல்களை ஊக்கவிக்கக்கூடிய படங்களை அல்லது செய்திகளை குழு ஒன்றிடம் தெரியப்படுத்தினர். பிறிதொரு குழுவிடம் நடுநிலை வாய்ந்த படங்களையும் செய்திகளையும் தெரியப்படுத்தினர். இந்நிகழ்வுக்குப் பின்னர் இவ்விரு வகைப்பட்ட குழுக்களைச் சேர்ந்தவர்களையும் மீச்செலவு நடவடிக்கைகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்கினர். இந்நிலையில் முதற்குழுவினைச் சார்ந்தோர் கூடுதல் மீச்செலவினைக் காண்பிப்பவர்களாகவும் இரண்டாம் குழுவினைச் சார்ந்தோர் குறைந்தளவிலான மீச்செலவினைக் காண்பிப்பவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாய்வின் பேறாய் மனோரதியக் காட்சிகள் மீச்செலவினைத் தூண்டுவதில் கூடிய பங்கினை வகிக்கின்றன என்கிற கருத்தாக்கம் பெறப்படுகின்றது.[10]

3.0 மீச் செலவுக் கொள்கைகள் எனக் குறிப்பிடுவதைக் காட்டிலும் மீச் செலவுக் கருதுகோள்கள் எனக் குறிப்பிடுதல் மிகப் பொருத்தமாய் அமையும். மீச்செலவு குறித்த முக்கிய கருதுகோள்களாக அல்லது கொள்கைகளாக முறையே

(1) உயிரியல் அடிப்படைகளும் மீச் செலவும்; (Biological Basis and Aggression)
(2) ஊக்கிக்கொள்கையும் மீச்செலவும் (Instinct Theory and Aggression)
(3) மனமுறிவு-உந்தல் மீச்செலவுக் கொள்கை (Frustration- Drive Theory and Aggression)
(4) சமூகக் கற்றல் கொள்கையும் மீச் செலவும் (Social Learning Theory and Aggression) என அமையும்.

3.1 1961 இல் றொபேட் அன்ரியின் (Robert Andrey) ஆராட்சிகள் மீச்செலவு மிக அதிகளவில் ஏன் இடம்பெறுகிறது, பாரிய அழிவுக்குக் காலாக அமைகின்றது, மீச் செலவூக்கம் எங்கிருந்து அல்லது எவற்றிலிருந்து உருவாகின்றது என்கிற வினாக்களை மையப்படுத்தியவாறாக அமைந்தன. இரண்டு ஊகங்கள் முறையே உயிரியல் காரணிகளினால் மீச் செலவு இடம் பெறுகின்றதா? அல்லது சமூகக் காரணிகள் மீச்செலவினை முன்தீர்மானிப்பதில் கணிசமான பங்கு வகிக்கின்றதா? என்றவாறாக றொபேட் அன்ரி முன்வைத்தார். இறுதியாக உயிரியல் காரணிகள் தான் மீச்செலவுருவாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது என்ற முடிவுக்கு வந்தார்.

உயிரியல் காரணிகள் மீச்செலவை உருவாக்குகின்றது என்கிறபோது அவை உடன்பிறந்தவை என அர்த்தப்படுத்தப்பட்டு மாற்றமுடியாதவை என்றவாறாக அமைந்துவிடும். இந்நிலை மீச் செலவுக்கு பரிகாரம் காணமுடியாதென்கின்ற நிலையை ஏற்படுத்திவிடும். ஆய்வுகள் எப்போதும் நடைமுறைத் தீர்வை காண்பதை நோக்கமாக கொண்டவையாதலால் மீச் செலவுப் பொறிமுறை குறித்து நோக்குதல் அவசிமாகின்றது.

3.2 பீக் (Beck) (1983) என்பவர் மீச் செலவில் மூளைப்பகுதியில் காணப்பெறும் குறித்த சில நரம்புகளின் செயல்பாடுகள் முறையே அவை கைபோதலமஸ் (Hypothalamus), அமியாடாலா (Amygdala) போன்றவை மீச் செலவுருவாக்கத்தில் பங்கு கொள்கின்றன என்றார்.[11] பலவகைப்பட்ட கோமோன்களும் மூளையில் ஏற்படும் வெவ் வேறுவகைப்பட்ட இரசாயன மாற்றங்களும் மீச்செலவுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. ரெஸ்ரெஸ்ரரோன் (Testosterone) என்கின்ற ஆண் கோமோன் இவற்றில் குறிப்பிடத்தக்கது. இது மனித இனத்திலும் பல மிருக வர்க்கத்திலும் காணப்படுகின்றது. ஆண் இளம் பெண் இனத்தைக் காட்டிலும் கூடுதல் மீச் செலவு உள்ளவர்கள் என்பதை, மேற் குறித்த கருத்தினை அடிப்படையாகக் கொண்டே மாக்கோபி (Maccopy) யக்கலின் (Jacklin) 1974இல் எடுத்துக்காட்டினார்.[12]

3.3 1976இல் மோயர் (Moyer)மேற் கொண்ட ஆய்வுகள் உயிரியல் அடிப்படைகள் மீச்செலவுக்கு காரணமாய் அமைகிறது. அல்லது ஓர் முன்னிலையை மீச் செலவுக்காய் உருவாக்குகிறது என்பதனை வெளிப்படுத்தின. மீச்செலவில் உடலியல்சார் பங்களிப்புக்கள் குறித்த விரிவான ஆராய்ச்சிகளாக இவரது ஆய்வுகள் அமைந்தன. மீச்செலவினைக் கட்டுப்படுத்துவதில் வெவ்வேறான நரம்புத் தொகுதி செயற்பாடுகள் பங்கு கொள்கின்றன. ஓர் பெறுபேற்றை அல்லது வெகுமதியை அடைகின்றபோது வெளிப்படுத்தப்படும் செயல்பாடு அமைப்புரீதியான படிமுறைகளை கடந்துசெல்லும் அவ் படிமுறைகள் முறையே,

1. உயர்ந்ததோர் படிநிலை; இப் படிநிலை முளைச்சுற்று பிரக்ஞையை உருவாக்கும், அத்துடன் உயிரி கோப்பாடடைந்திருந்தும் அதனது செயல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

2. மத்தியநிலை அல்லது நடுவண்நிலை: நடுவண் நிலை வழமையானதோர் நிலையாகும். இந்நிலையில் ஓர் கட்டத்தில் நரம்பியல் அமைப்புக்கள் தொழிற்பாடுமின்றி இருக்கும். ஆனால் தாக்குதலுக்கான செயல்நிலை தூண்டுவதற்குட்பட்டிருக்கும்.

3. தாழ்நிலை; இந்நிலையில் மூளையமைப்பு தொடர்ந்தேர்ச்சியாக சுறுசுறுப்பாக இருக்கும். இந்நிலையில் உயிரி பொறுமையிழந்து காணப்படும் ஒரு பொருத்தப்பட்டான நிலை ஏற்படும் வரையில் காத்திருக்கும்.[13]

இவ்வாறாக படிநிலைகளை ஒழுங்குபடுத்தி மீச் செலவுக்கான ஊக்குவிப்பை வழங்குவதில் உயிரியல் அடிப்படைகள் உதவுகின்றன. வன்முறையாளர்களுள் 90 இற்கும் அதிகமானோர் மூளையின் ஒழுங்கற்ற செயற்பாட்டிற்கும் நரம்பியல் பாதிப்புக்களுக்கும் உடன்பட்டனராய் காணப்பெற்றனர் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

சமகாலப் பரிசோதனைகள் தனிநபரொருவரது இரத்த அமுத்தத்தை அதிகரிக்கச் செய்வதனாலும் குருதியில் காணப்படும் குளுக்கோசின் அளவுமாற்றங்கள் Hypoglycemic நிலையை உருவாக்கு-வதனாலும் மீச்செலவு நடவடிக்கைகளில் நேர்க்கணிய தாக்கங்களை உருவாக்கு-கின்றது என்பதை வெளிப்படுத்தின.

உயிரியல் அடிப்படைகள் மீச்செலவினை ஊக்க உதவுகின்றது என்கின்ற கருத்தாக்கம் ஏற்புடைய தொன்றெனின் ஏன் எல்லா மனிதர்களும் மீச்செலவாளர்களாய் காணப்படுவதில்லை. சிலர் மட்டுமே மீச்செலவாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இவ்வாறானதோர் ஐயப்பாட்டிற்கு இக்கொள்கை தகுந்த பதிலொன்றினைத் தராமையால் வலுவிழந்ததொன்றாகி புதிய கொள்கை உருவாக்கங்களுக்கு வழிவிடுவதாய் அமைந்துபோயிற்று.

3.4 ஊக்கியும் மீச்செலவும் என்கின்ற கொள்கை பழமையானதொன்றாகும். 1930 இல் சிக்மண்ட் பிராய்ட் வாழ்வியல் ஊக்கி (Life Instinct) சாவியல் ஊக்கி(Death Instinct) என்கின்ற இரண்டும் மனிதர்களில் காணப்படும் அடிப்படையான ஊக்கிகள் என்றார். சாவியல் ஊக்கி உயிரியல் எழுச்சி நிலைகளை உருவாக்குகின்றது. இவ் எழுச்சி வெளியார்ந்த நடத்தையாக வெளிவரும் வரை அல்லது உள்ளார்ந்ததாய் அமிழ்ந்து உள அழிவுச் செயல்களை உருவாக்கும்வரை செயல்தீவிரம் கொண்டதொன்றாக காணப்படும்.[14] பிராய்ட்டினைப் பொறுத்தவரை மீச்செலவினைத் தவிர்த்தல் அசாத்தியமானதாகும். எனவே சமூகம் மீச்செலவாளன் ஒருவனின் நேர்க்கணியமான மனவெழுச்சி நிலைமைகளை மேலோங்கச் செய்து அவ் மனவெழுச்சிகளை வெளிக்காட்ட சமூகம் அங்கீகரித்த வாய்ப்பான பதிலீடுகளை ஏற்படுத்திக்கொடுத்தல் வழியாக மீச்சசெலவின் தாக்கத்தினை குறைக்கலாம் என்கிறார் பிராய்ட்.

மீச்செலவு சக்திவாய்ந்ததும் கொடுமை நிறைந்ததுமானதொன்றாகும். மீச்செலவு மனிதர்களில் காணப்படுவதற்கு காரணம்; இளம்பிராயத்தில் ஏற்பட்ட ஊக்கித்தேவைகள் உதாசீனம் செய்யப்பட்டமையால் என பிராய்ட் குறிப்பிடுகின்றார். சமகால உளவியலாளர்களான அருட்னி (Ardny) (1966) லோறன்ஸ் (Lorenz) (1966) ஸ்ரூர் (Stoor) (1968) போன்றவர்களிடம் பிராய்ட்டின் மீச்செலவு குறித்த கருத்தின் சாயல் காணப்படுகின்றது. இவர்களைப் பொறுத்தவரையில் மனிதனிடம் துரிதமானதோர் ஊக்கி அவனை வெறுப்படையச் செய்வதற்கும் அழிவுக் செல்களில் ஈடுபடச் செய்வதற்குமாய் உதவுகின்றதென்கின்ற கருத்தாக்கத்தினை ஏற்றுக்கொள்ளுகின்றனர். எனினும் பிராய்ட் கருதுவதுபோல் இது அழிவுச் செயலுக்கு மட்டும் அடிப்படையாய் விளங்குகின்றது என்கின்ற கருத்தாக்கத்தினை இவர்கள் ஏற்பதில்லை. லோறன்சை பொறுத்தவரை மனிதர்கள் வலிதானவற்றிலிருந்து தப்பித்து வாழ்வதற்காகவே மீச்செலவினை உருவாக்குகின்றார்கள் என்றார். விலங்குகள் கூட இதுபோன்ற நடத்தைப் பாங்குகளை கொண்டிருக்கின்றன எனவும் மேலும் குறிப்பிடுகின்றார். சத்திவாய்ந்த விலங்குகள் தன் இனத்தை சேர்ந்த பிறிதொன்றிலிருந்து தப்பித்து வாழ மீச்செலவு நடத்தைகளை வெளிப்படுத்துகின்றன. ஆக, பாதுகாப்பிற்காகவும் உணவுத் தேவைகளிற்காகவும் மேலும் வலுவில் குறைந்த உயிரிகளைத் தாக்கி, களைந்து வலியனவாழ வழிவகுக்குமோர் மனஎழுச்சி, மனிதர்களிடமும் விலங்குகளிடமும் பொதுவாக காணப்படுகின்றது. கமொன்ட் (Hammond) (1984) ஸ்கொட்டல் (Scottl) (1984) போன்றவர்கள் லோறன்சின் கருத்தாக்கத்தினை மறுதலித்து மீச்செலவு வடிவங்கள் எனக் காணப்படுபவை கூட புறவய அனுபவங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டவையே என்கின்றனர். எவ்வாறெனினும் லோறன்சின் கருத்தாக்கம் மீச்செலவு நேர்க்கணிய விளைவுகளைக் கொண்டன என்பதாகும். மீச்செலவு நடவடிக்கையினால் குறிப்பாக விலங்குகளில் நெருங்கி வாழ்கின்ற நிலைமை தவிர்க்கப்பட்டு அல்லது தளர்த்தப்பட்டு பரவலாக இடம் பெயர்ந்து வாழுகிற நிலைமை உருவாக்கப்பட்டு, மேலும் இனப்பெருக்கத்தின் போது வலிதற்ற விலங்குகளை தோல்வியுறச் செய்து வலிதான தகுந்த சோடிகள் இனப் பெருக்கத்தில் ஈடுபடுகின்ற நிலை உருவாக்கப்படுகிறது.[15]

3.5 மனமுறிவு-மீச் செலவுக் கொள்கையினை ஆய்வு செய்வதற்கு வாய்ப்பாக அதன் உள்ளடக்கங்களை உள்வாங்கியவாறாய் மனமுறிவு- கோபம்- மீச்செலவுக் கொள்கை எனக் குறிப்பிடல் பொருந்தும். எதுவொன்று ஒருவர்க்கு முக்கியமாகப்படுகிறதோ அதைக் கிடைக்க விடாதவாறு தடைசெய்யும் பொழுது எழுச்சி பெறும் அனுபவமே கோபம். மன முறிவு எழுச்சிபெறும் கோபம் மீச்செலவு நடத்தைக்கு இட்டுச் செல்லும் என உளவியலாளர்கள்

குறிப்பிடுகின்றனர். மனமுறிவு மீச்செலவை ஏற்படுத்துகிறது என்றும்; மீச்செலவுக்கு முன்னாய் மனமுறிவு இல்லாதபோது மீச்செலவு தோற்றம் பெறாதென்பதே இக் கொள்கையின் ஆரம்பகால நிலைப்பாடாய் இருந்தது.[16] இலக்குகள் எட்டவிடாதவாறாய், தடைப்படுத்தப்படுகின்றபோதும், தலையீடுகள் ஏற்படுத்தப்படுகின்றபோதும் மனமுறிவு உருவாகும். எடுத்துக்காட்டாக உயிரியல் தேவைகளான; உணவு, நீர், உறக்கம், பாலுணர்வு போன்றன திருப்தியாக கிடைக்க முடியாதவாறாய் தடைப்படும்போது மனமுறிவு ஏற்படுகின்றது. அவ்வாறே சமூகத் தேவைகளான சமூக ஏற்புடமை, அன்பு செலுத்துதல், பாதுகாப்பு போன்றன கிடைக்காதவாறு தடைப்படுகின்றபோதும் மனமுறிவு ஏற்படுகின்றது. எனினும் உளவியலாளர்கள் சிலர் மனமுறிவு கோபம் எப்போதுமாய் மீச்செலவில்தான் சென்று முடியும் என்கின்ற கருத்தாக்கத்தை மறுதலிக்கின்றனர்.

டொலோட் (Dollord), டுப்(Doop), மில்லர் மூவர் (Miller Mover) (1939) போன்ற உளவியலாளர்கள் மனமுறிவு மீச்செலவு கொள்கை குறித்து கூடிய கவனம் செலுத்தினர். மனமுறிவு மீச்செலவினை உருவாக்குகிறது என்பதே இவர்களது கருத்தாகும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மனமுறிவு இலக்குகள் சிலதை அடையமுடியாதவாறாய் தடைப்படல், தலையிடல் ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் உயிரியல் சமூகவியல் தேவைகள் தடைப்படுகிறபோதும் மனமுறிவு ஏற்படல் சாத்தியம். எனினும் எப்போதும் மனமுறிவு மீச்செலவில்தான் சென்றுமுடியும் என்றவாறாயும் இல்லை. மனமுறிவு ஏற்படுகிறபொழுது கூடுதலான அல்லது புதிதான தற்திறனை மென்மேலும் அதிகரித்து நோக்கொன்றினை அடைந்துகொள்ள முயலலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் மனமுறிவு மீச்செலவினை உருவாக்குவதற்கு பதிலாக அவை மென்மேலும் நோக்கை அல்லது இலக்கை வென்றெடுக்க வேகமான மேலதிகமான செயற்பாட்டினை மேற்கொள்ள உதவுவதாய் அமைந்தும் காணப்படும். அல்லாமலும் மனமுறிவு மீச்செலவில் சென்று முடியாது பதிலாக மந்தமான செயலற்ற நிலைகளையும் உருவாக்கக்கூடும். ஆக, மனமுறிவின் பின்விளைவாக மேற்குறித்தவை-களும் காணப்படுவதனால் மனமுறிவு எப்போதுமாய் மீச்செலவில் கொண்டு சேர்க்கும் என்கிற கருத்தாக்கம் வலிதற்றதாகிறது. 1941 இல் மில்லர் நடாத்திய ஆய்வுகள் மனமுறிவு மீச்செலவை மட்டுமல்ல வேறான சில நடத்தைகளையும் உருவாக்கும் என்கிற கருத்தினை வலுப்படுதின.[17]

1941இல் பார்க்கர் (Barker) டெம்போ (Dembo) லூயின் (Lewin), மனமுறிவு மீச்செலவு கருதுகோள் குறித்த பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டனர். இப்பரிசோதனை மனமுறிவு - கோபம் - மீச்செலவு கருதுகோளினை மீளவும் முன்மொழிவதாய் அமைந்தது. இரு குழுவினராக சிறார்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஒரு குழுவைச் சேர்ந்த சிறார்களுக்கு மிகவும் கவரத்தக்க விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றோடு விரும்பியவாறாய் விளையாடவும் அனுமதிக்கப்பட்டார்கள். குழு இரண்டினைச் சேர்ந்த சிறார்களிடம் கவர்ச்சிகரமான விளையாட்டுப் பொருட்களை வழங்கி அச்சிறார்களை அவற்றுடன் விளையாட விடாதவாறாய் தடைசெய்து, வெறுமனவே பார்த்துக்கொண்டிருக்க மட்டும் பணிக்கப்பட்டார்கள். இச் செய்கை மூலம் இரண்டாம் குழுவினருக்கு மனமுறிவு ஏற்பட வழிசெய்யப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு குழு இரண்டினைச் சேர்ந்தவர்களை விளையாட்டுப் பொருட்களோடு விளையாட அனுமதிக்கப்பட்டது. அவ்வேளையில் அவர்கள் விளையாட்டுக்குரிய பொருட்களை நிலத்தில் அடித்தும் சுவரில் எறிந்து உடைத்தும் முரணான விளையாட்டு ஒன்றில் ஈடுபட்டு குறிப்பிடத்தக்க அளவில் அழிவுச் செயல்களில் அக்கறையுடன் ஈடுபட்டார்கள். மறுபுறத்தில் குழு ஒன்றினைச் சார்ந்தவர்கள் மனமுறிவு உணர்வுகளை வெளிப்படுத்தாது அமைதியாகவும், ஆரோக்கியமாகவும்

விளையாட்டில் ஈடுபட்டனர். இந்நிலை விருப்பத்திற்கெதிரான தடைகள் தலையீடுகள் ஏற்படுகிறபோது மனமுறிவு ஏற்படுதலையும் அதன் தொடர்விளைவாய் மீச்செலவு நடத்தை இடம்பெறுகிறது என்பதையும் துல்லியமாக எடுத்துக்காட்டிற்று.

மனமுறிவு மீச்செலவு கருதுகோள்கள் இரண்டு முக்கியமான கருத்தாக்கங்களை உள்ளவாங்கியதாய் காணப்படுகின்றது.

1. மனமுறிவு எப்போதும் சிலவகைப்பட்ட மீச்செலவுக்கு கொண்டு சென்று சேர்க்கும்.
2. மீச்செலவு எப்போதும் மனமுறிவின் பெறுபேறாய் இருக்கும் என்பனவாகும்.

குறுகிய காலத்தில் உளவியல் புலத்துள்ளும், புறத்தேயும் இக்கொள்கை பிரபல்யம் அடைந்தது உண்மையெனினும் மீச்செலவின் தோற்றம் குறித்து இக்கொள்கை சரியானபடி கணிப்பிடவில்லை. மனமுறிவடைந்த தனிநபர் எப்போதும் தனது சிந்தனையிலும் செயலிலுமாய் மீச்செலவு நடவடிக்கைகளில் இறங்கிவிடுவதில்லை. பதிலாக பல்வேறு பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்துவர். சந்தர்ப்பங்கள் சிலதில் ஏற்பட்ட மனமுறிவினை மேவியவாறாய் நோக்கமொன்றினையுடைய புதிய உத்வேகத்துடன் முயல்வர். எடுத்துக்காட்டாக நேர்முகப்பரீட்சைகள் பலவற்றுக்கு தோன்றி ஒன்றிலும் ஒருவர் தெரிவாகவில்லையெனில் அவர் மீச்செலவு நிலையடைவாரோ அல்லது மனச்சோர்வு அடைவாரோ எனில் மனச்சோர்வடைவார் என்பதே பொதுப்-புத்திக்குப் பொருந்தும் மேலும் எல்லாவிதமான மீச்செலவும் மனமுறிவிலிருந்தே உற்பவிக்கிறது என்பதும் பொருத்தமான-தொன்றல்ல. எடுத்துக்காட்டாக படையினர் போர்க்காலத்தில் தங்கள் மேலதிகாரிகளிடும் கட்டளைகளை நிறைவேற்றும் பொருட்டாய் பாரிய துன்பங்களையும் நோவினையும் அப்பாவிகளுக்கு ஏற்படுத்துகிறார்கள். இவ்விதம் செயற்படும் போர்வீரர்களுக்கு சிறிதளவேனும் மனமுறிவு மனப்பாங்கு இருக்காது எனவே மனமுறிவு சில சந்தர்ப்பங்களில் மீச்செலவுக்கு உந்துதலாய் இருக்குமே தவிர எப்போதுமாய் முன்னிலையில் இருப்பதில்லை.

3.6 சமூகக் கற்றல் கொள்கையும் மீச்செலவும் என்கின்ற கருத்தாக்கத்தினை சார்ந்தோர்; ஏனைய கற்கை நெறிகளைப் போன்றதோர் துலங்கல் தொழுகையே மீச்செலவு என்கின்றனர். அவதானிப்புக்கள் வழியாக அல்லது பார்த்துச் செய்தல் வழியாக மீச்செலவுக்கற்றல் இடம்பெறும். மேலும் இது மீள்வலுவுருவாக்கம் பெறுகிறதொன்றாகவும் காணப்படுகிறது. தனிநபர் ஒருவர் நோக்கொன்றினை அடைவதில் தடையேற்படுத்தப்படும்போது வேதனைதரும், களைப்புத்தரும், குழப்பம் தரும் விளைவுகளை சந்திக்கும்போதும் மனவெழுச்சி உருவாகும். மனவெழுச்சிகள் கற்றுக்கொண்ட சூழலில் இருந்து பெறப்பட்டவையே. இவை மீச்செலவுரு வாக்கத்திற்கு வழியாய் அமையும்.

அவதானித்தல் அடிப்படையிலேயே சமூகக் கற்றற்கொள்கை இடம்பெறுகின்றது. சமூகக்கற்றல் நான்கு அடிப்படையிலான முறைமையொன்றினைக் கொண்டதாக காணப்படுகின்றது.

1. முதலாவது படிநிலை: மாதிரிகளை நோக்கி கவனத்தை திருப்பிக் கொள்ளுதல், கவனம் செலுத்தப்படாதவிடத்து எத்தகைய காட்சிகள் இடம்பெறுகின்றதெனத் தெரிந்துகொள்ள முடியாது.
2. இரண்டாவது படிநிலை: எமது அறிகைப் புலன்துறையை முழுமையாக ஈடுபடுத்துதல், இதன் மூலம் மாதிரியாகத் தரப்பட்டவைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் நினைவில் வைத்துக்கொள்ளவும் முடியும்.
3. மூன்றாவது படிநிலை: எம்மால் அவதானிக்கப்பட்டவற்றை நடைமுறையில் பிரயோகப்படுத்துதல் ஆகும். எனினும் புறநடைகளும் உண்டு. எடுத்துக்காட்டாக இளம்பிள்ளைவாத நோயால் பீடிக்கப்பட்டவராக இருந்தால் அவரால்

துவிச்சக்கரவண்டியை ஓட்டுதலை செய்துகாட்ட முடியாது.

4. நான்காவது படிநிலையில் மாதிரியில் தரப்பட்ட நடத்தையின் அடிப்படையில் நாம் மீள்வலுவுருவாக்கத்தினை செயற்படுத்த முனைதல். கூடுதலாக சிறுவர்கள் இத்தகைய மாதிரிநடத்தைகளில் கூடுதல் ஈடுபாடு கொள்கிறார்கள்.

மீச்செலவு நடத்தையாளர்கள் சில கலாச்சாரப் பின்னணிகளில் கௌரவிக்கப்படுவதை (வெகுமதிகள் பரிசில்கள் வழங்கி) கவனத்தில் எடுத்துக் கற்றுக் கொள்ளும் ஒருவன் மீச்செலவு நடத்தையாளனாக மாறலாம் என்கிறார்கள் சமூகக்கற்றல் கொள்கையினர். இவ்வகையில் வெகுசன ஊடகங்கள் இத்தகைய மீச்செலவு நடத்தைகளை வளர்த்தெடுப்பதில் பெரிதுமாய் உதவுகின்றன.[18]

லினோட் பேக்வூக்ஸ் (Lenord Berkwowitz) இனது ஆராட்சிகள் சமூகக்காரணிகள் மீச்செலவு உருவாக்கத்தில் கணிசமான பங்கினை வகிக்கின்றன என்பதை வெளிப்படுத்தின. தனிநபர் வன்செயலுக்கும் மீச்செலவு நடத்தைக்கும் வளைந்து கொடுக்கக்கூடிய நிலைப்பாட்டை நெரிசல்; இரைச்சல் போன்றவை உருவாக்கும். கும்பலாய்க் கூடுதல் நெரிசலாய் நிற்றல் போன்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தனித்துவம் பேணப்படாததுடன் சுயப்பிரக்ஞை குறைந்தும் காணப்படும் என்பது ஓர் உளவியல் பெறுகையாகும். பெயர் இனங்காணப்படாத நிலையே சனக்கூட்டம். இந்நிலையில் கற்றல் வழியாக தனிநபர் ஒருவர் மீச்செலவு நடவடிக்கைக்கு தூண்டப்படுவர். கும்பல்நிலையில் சமூக அந்தஸ்து குறித்த பிரக்ஞை குறைந்தும் சுயகௌரவம் குறித்த குறைந்தளவிலான அக்கறைப்பாடு மட்டுமே காணப்படும். இந்நிலையில் இவர்களது கவனம் கும்பல்நிலையையே சார்ந்திருக்கும். ஒருவரது தனித்துவ சிந்தனைகள் குறித்தோ மனப்பாங்குகள் குறித்தோ உடல்நிலை குறித்தோ இங்கு அக்கறைப்பாடிராது. குழுசார்ந்த நிலையில் எதிர்க்கணிய மனப்பாங்குகளை ஏற்படுத்தி மீச்செலவு நடத்தையுந்தலுக்கு பெரும்பாலும் வழிவகுக்கும். எனினும் எப்போதும் கும்பல் நிலையில் எதிர்க்கணிய மனப்பாங்குகள் உருவாகும் என உறுதிபடக்கூறமுடியாது.

சமூகக்கற்றல் கொள்கை மீச்செலவினை கற்றுக்கொண்ட சமூகநடத்தை வடிவம் என்றவாறாக குறிப்பிடுகின்றது. அல்பேட் பன்றோ (Albert Bandura) (1973) றோபேட் பாரன் (Robert Baron) (1977) ஆகியோர் சமூகக் கற்றல் கொள்கையை சமகாலத்தில் ஆராய்ந்தவர்களாவர். இவர்களின் பிரகாரம் மீச்செலவு நடத்தை பிறரை அவதானிப்பதன் வழியாகவும் பார்த்துப் பின்பற்றுதல் வழியாகவும் ஒரு நேர்க்கணிய மறுபக்கத்தினை தனிநபரொருவர் பெறுகிறார் என்பதாகும்.

எவ்வாறாய் மீச்செலவினைக் கற்கிறோம், எவ்விதம் மனமுறிவையும் கோபத்தையும் மீச்செலவினூடாக வெளிப்படுத்த கற்றுக்கொள்கிறோம், குறித்த சில சூழ்நிலையில் சிலரை துன்பத்துக்குள்ளாக்கியமை சரி என்றவாறாய் கருத எவ்வாறு கற்றுக் கொள்ளுகிறோம்? சூழலில் இருந்து எதைக் கற்றுக்-கொள்கிறோம்? என்கிற வினாக்கள் குறித்தும் கற்றல் கொள்கையினர் கவனம் செலுத்தினர். மீச்செலவு நடத்தை தண்டனைகள் வழியாகவும்; அங்கீகரித்து வெகுமதிகள் வழங்கி பாராட்டப்படுதல் வழியாகவும் கற்றுக்கொள்ளப்படுகின்றது என்கின்ற முடிவுக்கு வந்தனர். எம்மைச் சுற்றியுள்ள மனிதர்களிடமிருந்தும், சூழலில் இருந்துமே இவற்றை நாம் கற்றுக்கொள்கிறோம். கற்றல் கொள்கையினரின் பிரகாரம் மீச்செலவு உயிரியல் செயல்பாடுகளின் விளைவுமல்ல; ஊக்கிகளின் விளைவுமல்ல; மனமுறிவு கோபம் வழித்தொடர் விளைவுமல்ல என்கிறார்கள் மீச்செலவு குறித்த கருதுகோள்களில் கூடிய பொருத்தப்பபடானதொன்றெனவும் சிறந்ததொன்றெனவும் சமகாலத்தில் இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு காணப்படுகின்றது.

4.0 மீச்செலவு குறித்த முதன்மைக் கருதுகோள்கள் இதுவரையும் எடுத்து நோக்கப்பட்டதெனினும் மீச்செலவு நடத்தை உருவாக்கத்தில் வேறுசில காரணிகளின் பங்களிப்புக்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. சமகால உளவியலாளர்கள் இவை குறித்து அக்கறைப்பாட்டினை காட்டுகிறார்கள். குறிப்பாக மீச்செலவு நடத்தை உருவாக்கத்தில்; கோபம், மனவெழுச்சி, பரம்பரை, தொலைக்காட்சி சூழல், போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றின் தாக்கம் குறித்து உளவியலாளர்களிடம் வேறுபட்ட கருத்துக்கள் காணப்பெறினும் கூட இவற்றின் பங்களிப்புக்களை கவனத்தில் எடுக்காது தவிர்த்துவிட முடியும்.

4.1 மனவெழுச்சிகள் சில கோபத்துடன் மீச்செலவுடனுமாய் வெளிப்படுத்துகின்றன. கோபம் மகிழ்ச்சியின்மையால் ஏற்படும் வலிதானவோர் உணர்வாகும். மீச்செலவு எவ்விதமாய் ஒரு மனிதனுக்கு அல்லது பொருளுக்கு நோவை அல்லது அழிவை ஏற்படுத்துகின்றதோ அதுபோன்றே கோபமும் ஏற்படுத்தும் எனினும் எல்லாச்சந்தர்ப்பத்திலும் கோபம் மீச்செலவை ஏற்படுத்தும் என்றும் இல்லை. கோப உணர்வு, முரண்டுபிடிக்கிற, அழுத்திப்பிடிக்கிற, அழுங்குப்பிடியாய் பிடிக்கிற, விலகிச்செல்கிற, தாழ்வுணர்ச்சியை உண்டுபண்ணுகின்ற நிலைகளையும் உருவாக்க வழிவகுக்கும். மீச்செலவுகள் கோபத்தால் ஊக்குவிக்கப்படும் மீச்செலவும், செயல்தூண்டல் தூண்டி செயலாற்றுவிக்கின்ற மீச்செலவு என இருவகைப்படுத்தலாம்.[19] செயல்தூண்டல் தூண்டி செயலாற்றுவிக்கும் மீச்செலவில் கோபமும் மீச்செலவும் எப்போதுமாய் உடன்வரா.

4.2 மனவெழுச்சிகளும் ஊக்கிகளைப் போன்று மீச்செலவு நடத்தை உருவாக்கத்தில் பெரிதும் துணைபுரிகின்றன. மனவெழுச்சிகள் செயலாற்றல் மிக்கவை எவ்வாறாய் உயிரியல் ஊக்கிகள் செயல்படும் தன்மையதோ அவ்வாறே மனவெழுச்சியும் தீவிர ஊக்கிகள் போல் செயல்படும். மனவெழுச்சி சில சந்தர்ப்பங்களில் ஊக்குவிக்கப்பட்ட ஊக்கிகளுடனாகவும் வரும். மனவெழுச்சிக்கு எப்போதும் நோக்கு அல்லது குறிக்கோள் இருக்கும். நாம் சில நடவடிக்கைகளில் ஈடுபாடுடன் காணப்படுகிறோம். ஏனெனில் அவ் ஈடுபாடுகள் மகிழ்ச்சியைத் தரும் என்பதனாலாகும். எனவே அடைவுகளை அடைவதை நோக்கொன்றினை எட்டுவதை குறியாகக் கொண்ட மனவெழுச்சியும் மீச்செலவும் இடம்பெறுவனவாதலால் இவையிரண்டும் ஒரே குறிக்கோளை கொண்டவை. ஆக, இரண்டும் ஒன்றுக்கொன்று ஊக்கியாகவும் உறுதுணையாகவும் செயற்படும்.[20]

4.3 மீச்செலவுக்கும் பரம்பரைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. பரம்பரையுடன் கூடுதலாக தொடர்புபடும் உயிரியல் அலகுகள் மீச்செலவுடன் தொடர்புபடுத்தி ஆராயப்பட்டது. ஆராட்சிகள் மீச்செலவு நடத்தையும், பால்வேறுபாடும் மூளையும் குருதி இரசாயனமும், மூளை இரசாயனமும் என்றவாறாக தொடர்புபடுத்தி ஆராய்ச்சிகள் இடம்பெற்றன.

1974 இல் எலிலோர் மாக்கோபி (Elealor Maccopy) கரோன் நஜியக்லின் (Caron Najy Jacklin) மீச்செலவு நடத்தையினையும் பால் வேறுபாட்டினையும் மையப்படுத்தி ஆய்வொன்றினை மேற்கொண்டார். ஆய்வுகள் பெண்களைக் காட்டிலும் ஆண்கள் கூடுதல் மீச்செலவாளர்கள் என்கிற பெறுகையைப் பெற்றுத்தந்தன.[21] குருதி இரசாயனம் மீச்செலவை ஊக்குவிப்பதில் குறிப்பிடத்தக்களவில் பங்காற்றுகின்றது. இனக்கூற்றின் நடுநாயகமான ஆண்பால்கூறு Testosterone கூடுதலாக காணப்படுவர்கள் கட்டாயமாக மீச்செலவாளர்கள் இருப்பார்கள் என்றில்லை எனினும் குறைந்தளவிலாய் உள்ளவர்கள் மீச்செலவு எழுச்சி குறைந்தவர்களாய் காணப்படுவர் என டோறிங் (Doering) (1975) இன் ஆராட்சிகள் வெளிப்படுத்தின.

4.4 சூழல் மீச்செலவு நடத்தையை வேகப்படுத்துவதில் பங்காற்றுகின்றது. குறிப்பாக பௌதீகச் சூழல் கடும் வெப்பத்தோடு நீண்டுசெல்லும் கோடைக்காலம் எரிச்சல் நிலைகளை உருவாக்கி மீச்செலவினை ஊக்குவிக்கும். மேலும் அதிகசத்தும், அதிக வெப்பம், அதிக நெரிசல் போன்ற சூழல் தாக்கங்கள் உருவாகும்போது மீச்செலவ நடத்தைகள் ஊக்கம் பெறும்.

அடர்த்தியான குடிசன நெருக்கங்கொண்ட வதிவிடங்களில் வாழ்பவர்கள் இலகுவாக நோக்கும் அசௌகரியங்களுக்கும் ஆளாகி மீச்செலவு நடத்தைக்கு உள்ளாகின்றார்கள். அடர்த்தி என்பது கூடிய எண்ணிக்கையிலானோர் குறுகியதோர் இடப்பரப்பில் வாழ்வதனை இங்கு குறிக்கின்றது. மேலும் மக்கள் கூட்ட நெரிசலில் அகப்பட்டுக் கொண்டவர்கள், வாகன நெரிசலில் அகப்பட்டுக்கொண்டவர்கள் விரைவில் மீச்செலவு நடத்தைக்கு உந்தப்படுகிறார்கள். மக்கள் நெரிசல் காட்சிச்சாலையில் திருவிழாக்களில் பெருவிழாக்களில் உருவாகலாம்.

நகரங்களில் வாழ்பவர்கள் மீச்செலவு நடத்தைகளுக்கு அடிக்கடி இடனாகிறார்கள் என்பதனை 1970இல் ஸ்ரான்லி மில்கிராமின் (Sstanly Milgram) ஆய்வுகள் எடுத்துக்காட்டின. நகரவாழ்க்கை வாழ்பவர்களுக்கு மூளைமுட்ட, தலைமுட்ட வேலைகளும் தேவைகளும் இருக்கும். இவர்களுக்கு சுயமாகச் சிந்திக்க நேரம் கிடைக்காது. இந்நிலை ஒன்றினைக் குறித்து ஆழமாகச் சிந்திக்கின்ற நேரம் கிடைக்காது. இந்நிலை ஒன்றினைக் குறித்து ஆழமாகச் சிந்திக்கிற வாய்ப்பினை இழக்கச் செய்துவிடும். எனினும் இந்நிலையில் செயல்தூண்டல் விரைவுபட்டதாய் இருக்கும். இவர்கள் ஒவ்வொருவிடயங்களையும் மேற்போக்காக மட்டும் அவதானித்து வெறும்மனவெழுச்சி சார் தேவைகளிலே அதிகளவில் ஈடுபடும் பழக்கத்திற்கு பழக்கப்பட்டவர்களாகிவிடுவர். உடனடியாக தேவைப்படாதவற்றை உள்வாங்கிக் கொள்ள தயக்கங் கொள்வதோடு அவை குறித்து அலட்சியப் போக்கையும் கொண்டிருப்பார்கள் இத்தகைய நிலைப்பாடுகளினால் இவர்கள் சினேகமற்ற மனப்பாங்கினையும் கோப உணர்வுகளைக் கொண்டவர்களாகவும் மீச்செலவு உடையவர்களாகவும் மாறிவிடுவார்கள்.[22] நகர்வாழ் அனேக மக்கள் தங்களது உறவினர்களுடனான தொடர்புகளைக்கூட குறுகியதாய் வரையறுத்துக்கொள்கிறார்கள். அல்லது உறவுகளை அறுத்துவிடுகிறார்கள். மிகக் குறுகிய புவியியல் எல்லைக்குள் ஒருவரை ஒருவர் கண்டுகொள்ள முடியாதவாறு வாழ்கிறார்கள். தலைமறைவாக வாழ்கிறார்கள் என்றுகூட கூறலாம். இவர்களிடம் சமூக இசைவாக்கம் அருகிப்போய் ஒழுக்க விழுமியங்களில் பிடிப்பின்றிப்போய் எப்போதுமாய் மனவெழுச்சிக்கு உட்பட்டவர்களாகவும் மீச் செலவாளர்களாகவும் உருவாக்ம் பெற்றுவிடுவார்கள். இத்தகைய ஒடுங்கிய வாழ்க்கைமுறை மாறி ஒய்வுக்கும் சமூக உறவுக்குமான வாய்ப்புக்கள் இவர்களுக்கு கிடைக்கின்றபொழுது மீச்செலவு நடவடிக்கைகள் குறைந்துபோகும்.

4.5 வறுமை மீச்செலவு நடத்தையை ஊக்குவிப்பதில் குறிப்பிடத்தக்கதோர் இடம் வகிக்கின்றது. வறுமை மனமுறிவுக்கு வழிவகுக்கின்றது. ஒருபுறம் வறுமை மறுபுறம் மக்கள் தொடர்புசாதனங்கள் அந்தஸ்துக்குரிய பொருட்கள், மனோரதியப்பொருட்கள் குறித்தும் ஆடம்பரவாழ்க்கை குறித்தும் மனம்போன போக்கில் விளம்பரங்களை மேற்கொள்கின்றனர். இவ்வாறான எதிரெதிர் நிலைப்பாடுகள் மக்களை திணறடிக்கின்றது. மேலும் வறியவர்களின் ஆரோக்கியம் நிறைவற்றதாயும் அவர்களது கவலைகள் உணவு, உடை, உறையுள், பிழைப்பு குறித்ததாயும் அமையும் இந்நிலையில் அழுத்தங்களில் இருந்து அமுக்கங்களில் இருந்து தப்பித்துக்கொள்ள குற்றச்செயல்களை சமூக விரோதச் செயல்களை நாடுகிறார்கள். வறுமையும் போட்டியும் ஆடம்பர வாழ்வில் அறிமுகங்களும் மீச் செலவு நடவடிக்கைகளுக்கு கட்டற்ற முறையில்

மனிதர்களை ஊக்குவிக்கின்றன. இவர்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் இலக்குகளை அடைவதற்கு மீச்செலவினை ஓர் கருவியாக பாவிக்கிறார்கள்.

4.6 மீச்செலவு நடத்தையை ஊக்குவிப்பதில் தொடர்பு ஊடகங்கள் குறிப்பாக தொலைக்காட்சி பெரிதும் பங்கு வகிக்கின்றன என்கின்ற கருத்தாக்கம் பொதுவாக உளவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும் ஏரோன் கமிஸ்மன் (Eron Humesmann) இன் மீச்செலவு தொலைக்காட்சி குறித்த ஆய்வுகள் பிறிதொருவகையான முடிவினை பெற்றுத்தந்தது. மீச்செலவுக் காட்சிகளை தொலைக்காட்சியில் பார்க்க நேரிடுகிறபோது இளம் சமுதாயத்தினர் 'அச்சுறுத்தலான' சூழல் ஒன்றில் தாம் எவ்வாறாக மாட்டிக்கொள்ளாமல் தப்பித்து நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற கற்கையை இத்தகைய காட்சிகள் வழங்குகின்றன என்கின்ற நோக்கணியக் கருத்தாக்கம் பெறப்பட்டது. எனினும் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படுகின்ற அடித்தல், வதைத்தல், உதைத்தல், கொல்லுதல் போன்ற மீச் செலவு வன்செயல் நடத்தைகளைப் பார்ப்பவர்களது மனதில் இவ்வாறான காட்சிகள் வாழ்வியலில் தவிர்க்கமுடியாததொன்றாகி அடிக்கடி இடம்பெறக்கூடியதொன்றென்றும் மேலாக இத்தகைய செயல்கள் மூலம் ஒருவர் தனது சொந்தவிருப்புக்களை ஈட்டிக்கொள்ளலாம் என்கின்ற கருத்தாக்கமும் பெறப்படும். இத்தகைய நிகழ்வுகள் சிந்தனைக்கு விருந்தாய் அமைதல்வழியாக மீச்செலவு சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதென்கின்ற நினைவுப்பதிவினை பார்ப்போர் மனதில் பதித்துவிடக்கூடிய அபாயநிலையும் இதில் உண்டு.

மீச்செலவு ஓர் வலிதான நடத்தை வடிவம். நோக்கணிய நடத்தைகள் வலியன வாழ சிறந்த இனம் பெருக அன்பின் அதீதநிலைகளை வெளிப்படுத்த உதவுகின்ற அவ்வேளை எதிர்க்கணிய நிலைகள் உலக இயக்கத்தை கலக்குவதொன்றாய் சமாதான சகவாழ்விற்கு எதிராய் விடப்பட்ட சவாலாய் அமைந்தும் காணப்படுகின்றது. பாரிய உயிர் உடமை அழிவுகளுக்கு கால்கோளாய் அமைகிறது. எவ்வாறெனினும் மீச்செலவு நடத்தை உயிரியல் ஊக்கிகள், மனதின் வேறுபட்ட மனநிலைகள் சம்பந்தப்பட்ட-தொன்றாய் புறவியக்கற்றல் அடிப்படையில் பெறப்படுகின்றதொன்றாயும் அமைந்ததாகையால் இதை முற்றாக ஒழித்துவிட முடியாது. சரியானபடி இதை இனங்கண்டு பொருத்தமான வழிகளில் இதன் தாக்கங்களை வலுவிழக்க செய்வதன் வழியாக இதனால் ஏற்படும் அழிவு-நிலைகளைத் தவிர்த்துவிடலாம்.

5.0 பாரம்பரியமாக கோட்டநீக்கம் செய்தல் (Catharsis) தண்டனை வழங்குதல் (Punishment) வழியாக மீச்செலவு நடத்தைகளை தவிர்த்துவிடலாம் என எதிர்பார்க்கப்பட்டது. கோட்ட நீக்கம் தொடர்பாக ஆரம்பகாலத்தைய அரிஸ்ரோட்டிலின் கருத்தை நோக்குதல் இன்றும் பொருத்தமானதாய் அமையும். பிராய்ட், லோறன்ஸ் போன்றவர்களும் இக்கருதினை வரவேற்றிருந்தனர். கோட்ட நீக்கம் என்கிறபோது ஒருவரில் எழுச்சி பெற்றுள்ள மீச்செலவை பொருத்தமான வழிகளில் வெளிப்படுத்தி வைப்பதாகும். மீச்செலவு நடத்தையை மேலும் மீச்செலவு நடத்தை ஒன்றினால் குறைத்துக் கொள்கிறதோர் பண்பியல் மாற்றச்செயற்பாடே கோட்ட நீக்கம் ஆகும். அரிஸ்ரோட்டில் Poetics என்கிற நூலில் துன்பியல் காட்சி ஒன்றை பார்ப்பதற்கு பார்வையாளாகளுக்கு சந்தர்ப்பம் வழங்குகிறபோது அதனை அவர்கள் உள்வாங்குவதன் மூலமாக தங்களுக்குள்ளாய் ஆன துன்பியல் பய உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். பார்வையாளர்களது அனுபவங்கள் அத்துன்பியல் காட்சியிலே நடிப்பவர்களோடாய் அத்துவிதப்பட்டு அவர்களது உணர்வுகளை இவர்கள் உள்வாங்கி கோட்ட நீக்கல் அனுபவத்தினூடாக மீச்செலவினைத் தளர்த்திக்கொள்கிறார்கள்.

பிராய்ட்டின் பிரகாரம் எழுச்சி பெற்ற மீச்செலவு நடத்தைகளை அடிமனதுவரை

கொண்டு சென்று அமுக்காமல் அவ்வேளை அவை எழுச்சி பெற்று சமூக விரோதச் செயல்களில் ஈடுபடவிடாதவாறும் தவிர்த்து சமூகம் அங்கீகரித்துக்கொண்ட வாய்ப்பான வழிகளில் அவற்றை வெளிப்படுத்த வசதி செய்தலே கோட்ட நீக்கம் ஆகும் என்றார்.[23]

5.1 தண்டனை மீச்செலவு நடத்தைகளை குறைக்க உதவும் எனினும் அதன் மறுபக்கம் தீவிரமான எதிர்விளைவுகளை உருவாக்கும். எனவே தண்டனை முறைமை மீச்செலவு தவிர்ப்புக்கு அல்லது தணிப்புக்கு உதவமாட்டாது. தண்டனை மனவெழுச்சியினை உருவாக்கும். கடும் கோபத்தை உருவாக்கும். தண்டிக்கப்பட்டவர் அவ்வேளை தண்டனையை ஏற்றுக்கொண்டது போல் காட்டிக்கொண்டாலும் பிறிதோர் சந்தர்ப்பத்தில் தீவிரமான மனவெழுச்சி நடத்தை மூலம் மூலம் எதிர்விளைவை வெளிக்காட்டுவர். எனவே தண்டனை வழங்கி மீச்செலவு நடவடிக்கைகளைத் தவிர்க்கலாம் என்கின்ற கருத்தாக்கமும் வலுவிழந்த தொன்றாகும்.

5.2.0 சமகாலத்தில் உளவியலாளர்கள் மீச்செலவு நடத்தையை தளர்த்துவதற்கு வாய்ப்பாக புதிய இருவழிமுறைகளை முன் மொழிகின்றார்கள். அவை முறையே

1. நகைச்சுவையூட்டல் (Humour)
2. சிறிதளவிலான பாலியல் எழுச்சியூட்டல்.

5.2.1 நிகழ்வொன்றில் சினமடைந்த நபரொருவர் மீச்செலவு நடத்தைக்கு தயார்படலில்: மிகத் தீவிர தரம் வாய்ந்த சிரிப்பூட்டும் விடயமொன்றினை ஒருவர் தெரிவிக்கையில் மீச்செலவு நடத்தைக்காய் தீவிரப்பட்டவர் சிறிது அமைதிக்குப்பின் சிரித்து சகஜநிலைக்கு திரும்புவார். விறைப்பு வெறுப்பு நிலை நீங்கப்பெறுவர். இதன் தாற்பரியம் ஒரே நேரத்தில் இருவகைப்பட்ட வெவ்வேறான உணர்வு நிலைமைகளுக்கு ஒருவர் ஆளாகமுடியாது என்பதாகும். கோபப்பட்டுக்கொண்டு சிரிக்கமுடியாது. அழுதுகொண்டும் சிரிக்கமுடியாது. கோபம் கொண்ட ஒருவரது மீச்செலவு நடத்தையினை தளர்த்த சிரிப்பு ஓர் சிறந்த சாதனமாகும். மீச்செலவு நகைச்சுவை தொடர்புகள் குறித்து லானட்டி மெற்றி லீக் (Landy Metty leak) போன்ற உளவியலாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.[24]

5.2.2 சிறிதளவிலான பாலியல் எழுச்சிகளை உருவாக்குவதன் மூலம் மீச்செலவினைக் குறைத்துக்கொள்ளலாம். ஆச்சரியமான கருத்தாக்கமாக இது இருப்பினும் பல ஆய்வு முடிவுகள் இதனை வலுவாக்கின. பிராய்ட் பாலியல் எழுச்சிகளை ஏற்படுத்துவதன் வழியாக மீச்செலவினை சகஜநிலைக்கு கொண்டுவரலாம் எனக்கருதினார். அழகான இளம்பெண்களை நீச்சல் உடையில் காண்பிக்கின்றபொழுது அல்லது பெண்களின் உள்ளாடைத் தொகுதியோடான படங்களை பார்வைக்காக காட்டுகின்றபோது மீச்செலவாளர்கள் பெருமளவில் மீச்செலவு நடத்தைகளைத் தவிர்த்துக்கொள்வார்கள். மகிழ்வும் நேர்க்கணியமான உணர்வுகளும் எப்போதும் கோபம் மீச்செலவு போன்ற நடத்தைகளோடு ஒத்திருக்காது என்பதனையே இவை எடுத்துக் காட்டுகின்றன. எனினும் வலிதான பாலியல் உந்தல்களை ஏற்படுத்தக் கூடிய படங்கள் காட்சிகள் நேர்க்கணிய உணர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு பதிலாக எதிர்க்கணிய விளைவுகளையே கூடுதலாக ஏற்படுத்தியது. ஆகவே மிதமான பாலியல் எழுச்சிகளை தூண்டக்கூடியவைகளே நேர்க்கணியமான பயன்தரும் என்பது அழுத்தமானதோர் கருத்தாகும்.

6.0 சமூக உறவுகள் குறித்து தேர்ச்சித்திறனை உருவாக்குவதன் வழியாக மீச்செலவு எழுச்சியினைக் கட்டுப்படுத்தலாம். சமூக ஈடுபாடு சமூக அங்கீகாரம் சமூக அந்தஸ்து போன்ற கருத்தாக்கங்கள் குறித்து அக்கறைப்பாடு குறைந்தவர்களே அதிகமாக மீச்செலவு எழுச்சிகளுக்கு இலகுவில் உடன்படுகிறார்கள். எனவே சிறந்த

தொடர்பாடல் நுட்பங்களை சமூகவாழ்வின் உயர்ந்த தன்மைகளை ஒழுக்க விழுமியங்களின் மேன்மைகளை மனித சமுதாயம் உணர்ந்துகொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பதன் மூலமாக மீச்செலவின் எதிர்க்கணிய விளைவுகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும் மீச்செலவின் எழுச்சிக்குறித்து பல்வேறு கொள்கைகள் காணப்பெறினும் சமூகக் கற்றல் கொள்கை அவையாவற்றிலும் கூடிய பொருத்தப்பாடுடையதொன்றாய் காணப்படுவதனால் உளவியலின் வளர்ச்சிநிலை மனிதனுக்கு இசைவுடன் வாழும் மனப்பக்குவத்தினையும் மகிழ்வான வாழ்விற்கான சமூகச்சூழலினையும் உருவாக்கி வாழ்வினை பொருள் பொதிந்த தொன்றாக்குகிறபோதில் மீச்செலவு மட்டுமல்ல ஏனைய வன்செயல்களும் வலுவிழந்துபோகும்.

## மீச்செலவு~ Aggression


1) William Epstein Franklin Shontz, Psychology in Progress, Holt Rine and winstan inc New York 1971 P-239
2) James W Vander Zanden Social Psychology,1st Edition. Random House New york 1979 P-236
3) Ibid P-236
4) Ibid P-236
5) Das G General Psychology Kings Book Delhi 1995 P-194
6) Terry F.Pettijohn Psychology.3rd Edition The Dushkin Publishing Group Inc New york 1992. P-370
7) Larry T Brown Evota Weiner Introduction to Psychology Winthrop Publishing Inc Camberedge 1979 P-195
8) Opcit James W Vander Zanden 1977 P-333
9) Ibid P-341
10) Ibid P-346
11) Ludy T Benjamin J Roy Hopkins Jack R Nation Psychology, Macmillian Publishing Company New York 1990 P-368
12) Ibid P-370
13) Lindal Davidoff Introduction to Psychology MC Graw Hill Book Company New York 1987P- 336
14) Opcit Ludy T Benjamin J Roy Hopkins Jack R Nation 1990 P-390
15) Opcit James W Vander Zanden 1977 P-237
16) Ibid P-336
17) Ibid P-240
18) Huffiman vernoy William Vernoy-psychology in action Jhonwiley and sons 1991, P-568
19) Opcit Lindal Davidoff 1987 P-335
20) Ibid-P-333
21) Opcit Ludy T Benjamin J Roy Hopkins Jack R Nation 1990 P-615
22) Opcit Lindal Davidoff 1987 P-340
23) Baron Byrne, Kantowitz, psychology sundrs 1980-P-489
24) Ibid P-490